(அ) ஆம்.

(ஆ) பொருத்தமான இடம் தேர்வு செய்யப்பட்டவுடன் போக்குவரத்துக் கழகத்தின் நிதி நிலைமைக்கேற்றவாறு பணி மனை அமைக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கலவரங்களின் பாதிப்பின் காரணமாக அண்டை மாநிலமான பெங்களூர் செல்லும் பல பேருந்துகள் கடந்த மூன்று மாதங்களில் பல நாட்கள் ஓசூரில் தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால் இதற்கு துரிதமான நடவடிக்கையெடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட் நிறுவனத்தின் சார் பாக ஓசூரில் இரண்டு இடங்களை தேர்வு செய்திருக்கிறார்கள். அந்த இடங்களை தேர்வு செய்தவுடனேயே அந்தப்பணிமனையை அமைப்பதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் விரைந்து உத்தரவு வழங்கியிருக் கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 31, திரு என். ஆர். சிவபதி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

31---

புதிய திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையம்.

*9792—திரு. என். ஆர். சிவபதி:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருச்சியில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத் திற்கு புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டும் பொதுமக்கள் பயன்படுத்தப்பெறாத நிலையில் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : திருச்சியில் திருவள்ளுவர் போக்கு வரத்துக் கழக பேருந்து நிலையத்தில் ரூ. 18.60 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கட்டிட வேலைகள் துவங்கப்பட்டு கிழக்குப் பகுதியில் கீழ்த்தளத்தில் பணிகள் முடிவடைந்து உப யோகப்படுத்தப்படுகிறது. மேற்குக் கட்டிடப் பகுதியை சீரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதோடு அதற்கான வேலையை இந்த ஆண்டு இறுதிக்குள் முடித்து விடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி நகரம் இன்றைக்கு சென்னைக்கு அடுத்தபடி யாக மக்கள் நெருக்கம் அதிகமுள்ள நகரம். மாநிலத்தின் மையப் பகுதியில் அமைந்து இருப்பதால் மற்ற மாவட்டங்களுக்கு செல்லும் பேருந்துகள் அதிக அளவில் திருச்சி வந்து செல்கின்றன. அப்படியிருந்தும் பேருந்துகள் நிறுத்துவதற்கு போதுமான இட வசதி இல்லாத பேருந்து நிலையமாக திருவள்ளுவர் பேருந்து நிலையம் உள்ளது. இதனால் பேருந்து நிலையத்தின் அருகில் சாலைகளில் பேருந்துகள் நிறுத்தப்பட்டு புறப்பட்டு செல்கின்றன. இதனால் தவிர்க்க முடியாத விபத்துக்கள் நடக்கின்றன. இதனை அரசாங்கம் கவனத்தில் கொண்டு, எசன்ஷியல் சர்வீ ஸாகக் கருதி உடனடியாக புதிய பேருந்து நிலையம் நல்ல வசதிகள கொண்டதாக அமைய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை கட்டுகிற நேரத்தில் 1987-ஆம் ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதற்கு முன்பு 1986-ல் அந்தப் பணிமனை கட்டுவது நிறுத்தப்பட்டிருக்கிறது. காரணம் அதிலே பேருந்து சென்று திரும்பி வர முடியாத நிலைமை ஏற் பட்ட காரணத்தால் அதிலே சில தவறுகள் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் கருத்தில் கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடன் நாங்கள் பேசியதற்கு பிறகு பணிமனை கட்ட வேறு இடத்தை தேர்வு செய்து, அந்த இடத்தில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அந்த இடத்தை உடனடியாக வாடகைக்கு விடுவதற்கு இந்த அரசு துரிதமாக நடவடிக்கை களை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ச. ஆரோக்கிய சாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, தற்போது திருவள்ளுவர் போக்குவரத்து கழகத் தால் கட்டப்பட்ட அந்த பஸ் ஸ்டாண்டானது உபயோகிக்கப்

படாமல் மிகவும்சிரமத்தை திருச்சி நகர மக்களுக்கு உண்டாக்கியுள்ளது. தற்போதுள்ள பஸ் நிலையம் அதனால் பாதிக்கப் பட்டிருக்கிறது. போக்குவரத்து இதனால் 10 மணிக்கு மேல் மிகவும் பாதிக்கப்பட்டு இருப்பதால் அந்த திருவள்ளுவர் போக்குவரத்து பஸ் நிலையத்தை அமைப்பதற்கு ஏதாவது ஒரு காலக் கெடு —முன்பு ஒருமுறை திருச்சி வந்திருந்த அமைச்சர் அவர்கள் மூன்று மாதத்திற்குள் அதனை அமைப்பதாகச் சொன்னார்கள். எனவே, அதை விரைவில் அமைப்பதற்கு நடவடிக்கை யெடுப்பதோடு, அது எப்போது அமையும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கட்டிடப் பணிகளை நான் நேரிலே பார்வையிட்டேன். 1986-லே அந்தக் கட்டிடப் பணிகள் முடிக்கப்படாமல் பாதியில் நிறுத்தப்பட்டதற்குக் காரணம், அங்கே பேருந்துகள் உள்ளே சென்று திரும்பி வெளியே வர இயலாத நிலை இருந்தது. உள்ளே நுழையவே முடியாத நிலைமையும் இருந்தது. அந்தக் கட்டிடப் பணியின் அமைப்பு அப்படி அமைக்கப்பட்டு இருக்கிறது. அங்கேயுள்ள மாவட்ட ஆட்சித் தலைவரோடு நான் பேசியிருக்கிறேன். மேலும் அங்கே யிருக்கின்ற அமைச்சரோடு பேசி, வேறு இடத்தைத் தேர்வு செய்கிற அந்த முடிவுகள் மேற்கொள்ளப்பட்டதற்குப் பிறகு, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களிடம் அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறோம். மூன்று மாதத்தில் வேறு இடத்தைத் தேர்வு செய்து, உடனடியாக பேருந்து நிலையத்தைக் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 32. திரு. ஏ. டி. செல்லசாமி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்.

32 —

புதிதாக அரசு கூட்டுறவு நூற்பாலை

*9860 —திரு. ஏ. டி. செல்ல சாமி :

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஒட்டன் சத்திரம் தொகுதி, ஒட்டன் சத்திரம் பேரூராட்சி, கள்ளிமந்தயம், கீரனூர் பேருராட்சிகளில் புதிதாக அரசு கூட்டுறவு நூற்பாலை நிறுவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

TRUTH ALONE TRIUMPHS